விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 099 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 14 செவ்வாய்க்கிழமை (28.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



### திருநெல்வேலியில் அமைந்துள்ள
## இந்து போட் அலுவலகம் அடித்துடைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் (இந்து போட்) அலுவலகம் நேற்று மாலை 5 மணி



11

### ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் உடைப்பு
## மாபெரும் ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு

(வவுனியா)

வவுனியா வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் விக்கிரகங்கள் உடைத்தழிக்கப்பட்டமைக்கு கண்டனம்தெரிவிக்கும்விதமாக ஆலயத்தின் நிர்வாகத்தின ரால் மாபெரும் ஆர்ப்பாட்ட பேர ணிக்கு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்ட பேரணி நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா கந்தசாமி ஆலய வளாகத்தில் ஆரம்பிக்கப் பட்டு வவுனியா மாவட்டச் செய லகம் வரை சென்றடையவுள் ளது.

எனவே பொது அமைப்புக் கள், அரசியல் கட்சிகள், சமயப் பெரியோர்கள், பொது மக்கள், சமூக ஆர்வலர்கள் என அனைத்து தரப்புக்களும் பேதங்களை மறந்து குறித்த பேரணியில் கலந்துகொண்டு மத ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்துவதற்

11

# தமிழர்களுடன் நல்லிணக்கம் ஏற்படுத்துவதில் உறுதி

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களுடன் நல்லிணக்கம் ஏற்படுத்துவதில் தான் உறுதியாகவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழ்க் கட்சிகளுடன் தான் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாக வும் தெரிவித்துள்ளார்.

(07ஆம் பக்கம் பார்க்க)



### புத்தூர் வடக்கில்
## இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்தூர் வடக்கு பகுதியில் 18 வயது இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் வீட் டிற்கு முன்னால் உள்ள மாமரத்

11

### சாவகச்சேரியில்
## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு


(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டச் வீதி கண்டுவில்குளம் அருகா மையில் குடும்பஸ்தர் ஒரு வர் நேற்று சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதி

11

## பொருளாதாரத்தில் மீண்டுவிட்டோம் கடனைச் செலுத்த உழைக்க வேண்டும்



### அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத் தின் ஒத்துழைப்பை தொடர்ந்து பாரிய பொருளாதார நெருக்கடி யில் இருந்து மீண்டுவிட்டோம். முதல் தவணை நிதியுதவியின் ஒரு பகுதி அரச சேவையாளர் களுக்கு சம்பளம் வழங்க ஒதுக்கப்படும்.

ஆகவே, பெற்றுக்கொண்ட கடனை மீள செலுத்த அனை வரும் இனி கடுமையாக உழைக்க வேண்டும் என போக்குவரத்து,

11

## மிருசுவிலில் ஹயஸ் விபத்து; இளைஞன் ஸ்தலத்தில் பலி

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசு வில் பகுதியில் நேற்று திங் கட்கிழமை அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்ற கோர விபத்தில் இளை ஞன் ஒருவர் பலியாகியுள் ளார்.

யாழ்ப்பாணத்தில்



11

## 450 எரிபொருள் நிலையங்கள்
### 3 வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை

(கொழும்பு)

450 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு

11

## கச்சதீவில் சிறிய புத்தர் சிலை
### ஒப்புக்கொண்டது கடற்படை

(யாழ்ப்பாணம்)

கச்சதீவில் வழிபாட்டுக்காக ஒரு சிறிய புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

11

## அரசின் தீர்மானத்துக்கு இணங்க முடியாது
### பஃவ்ரல் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங் களை கண்காணிப்பதற்கு குழுவொன்றை அமைக் கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு இணங்க முடியாது.

அவ்வாறானதொரு தீர்மானத்தை அரசாங்கம் எடுக்குமானால், தேர்தல்

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

UKi




3rd Cohort of
DIGITAL MEDIA MARKETING
100% Scholarship

Join us on a path to Digital Marketing Success

இக்கற்கைநெறியானது
- உங்களின் தொழிற்துறையை Digital Marketing இல் அமைத்துக்கொள்ளவும்
  அல்லது
- உங்களது வணிகத்தை Digital Marketing ஊடாக வளர்த்துக்கொள்ளும் உத்திகளை தெரிந்துக்கொள்ளவும்

வழிப்படுத்தும்

3 months course with Internship opportunities in Jaffna

நேரம் : திங்கள் - வெள்ளி
மு.ப. 9:00 முதல் பி.ப 4:00

மொழிமூலம் : தமிழ்

100% புலமைப்பரிசில்

இன்றே விண்ணப்பியுங்கள்

@ uki.life/applications

மேலதிக விபரங்களுக்கு
uki.life
info@uki.life
077 074 0174

(15066)


# கச்சதீவில் புத்தர் சிலை உடன் நடவடிக்கை எடுக்குக

## யாழ். மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவில் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ப.யோ.ஜெபரட்ணம் அவர்களால் யாழ். மாவட்ட அரச அதிபருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில்,

புனித அந்தோனியார் திருத்தலம் அமைந்துள்ள கச்சதீவில் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளதாகவும் அரச மரங்கள் நாட்டப்பட்டுள்ளதாகவும் நம்பகரமான செய்திகள் எமக்கு கிடைத்துள்ளன. இதுபற்றி ஊடகங்களில் செய்திகளும் விமர்சனங்களும் வந்து கொண்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம்.

எனவே இதனைத் தங்கள் கவனத்திற்கு கொண்டுவரும் நாம், இதுபற்றி ஆராய்ந்து முறையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

இந்திய பக்தர்களும் இலங்கை பக்தர்களும் சமத்துவமாக ஒன்று கூடி வழிபட்டுச் செல்கின்ற கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் தனித்துவத்துக்கு அங்கு அமைக்கப்பட்டுள்ள புத்த பெருமானின் சிலைகள் மற்றும் நாட்டப்பட்டுள்ள அரச மரங்கள் என்பன பாதிப்பை ஏற்படுத்துவதோடு இரு நாட்டு நட்புக்கும் பங்கம் ஏற்படவும் இவை வழிவகுக்கும் என்பதையிட்டு நாம் கவலை அடைகிறோம்.

அத்துடன் கச்சதீவில் புனித அந்தோனியார் திருத்தலத்தை தவிர வேறெந்த மத அடையாளங்களோ, கட்டமைப்புக்களோ அமையக்கூடாது என்ற பாரம்பரியமும் மீறப்பட இப்படியான செயற்பாடுகள் வழிவகுத்து எதிர்காலத்தில் பல சிக்கல்கள் உருவாக ஏதுவாகும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

எனவே இவ் விடயத்தில் தாங்கள் மிகுந்த கவனமெடுத்து கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

# பாஷாண உத்வாசன சபிண்டீகரண அழைப்பு



நிகழும் சுபகிருது வருடம் பங்குனி மாதம் 03ம் நாள் (18.03.2023) சனிக்கிழமை அதிகாலை இறைபதமடைந்த எமது அன்புத் தாயார்

அமரர் ஸ்ரீலஸ்ரீ **நமசிவாயக் குருக்கள் புவனேஸ்வரியம்மா**

அவர்களின் பாஷாண உத்வாசனம் (கல்லெடுப்பு கிரியைகள்) 28.03.2023 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். மறுநாள் 29.03.2023 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் ஏகோதிட்டமும் சபிண்டீகரணமும் நடைபெறும். அதனைத்தொடர்ந்து 12.00 மணியளவில் இடம்பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

குருக்கள் பகுதி
கரணவாய் கிழக்கு, கரவெட்டி. (C-6245)

இங்ஙனம் : குடும்பத்தினர்
077 355 3086

# பெண் வெட்டிக் கொலை

தங்காலை பிரதேசத்தில் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தராக கடமையாற்றும் 30 வயதுடைய பெண் ஊழியர் நேற்று காலை பணி தொடர்பான தகராறில் கோரமாக வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனது வீட்டில் இருந்து களப்பணிக்காக சென்று கொண்டிருந்த போது வெலியார பிரதேசத்தில் வைத்து கூரிய ஆயுதத்தால் தாக்கி கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண், வெலியார நெதோல்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த திருமணமானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொலையை செய்த சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் தங்காலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

# 2ம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் இராசநாயகம் நித்தியானந்தம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04.10.1957 | 28.03.2021 |

ஈராண்டாகியதோ எம் ஒளிவிளக்கே
உமை இழந்து இன்று
ஈரவிழி காயவில்லை
இதயத்தால் நொந்து வாடுகின்றோம்
நித்தம் நித்தம் கனவுதனில்
நீங்கள் வந்து போவதனால்
சிறிது நெஞ்சாறி வாழுகின்றோம்
வேராக இருந்து எம்மை
விருட்சங்களாக்கிய உங்கள்
நேரான பண்புகளை நெஞ்சில் சுமந்தபடி
நீர்காட்டிய வழியில் நடக்கிறோம்
தீராது என்றும் உம் நினைவுகள்...
என்றும் உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்

திக்கம்,
பருத்தித்துறை. (C-6244)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பொதியின் விலையை குறைக்க வலியுறுத்து

(கொழும்பு)

மரக்கறிகள் மற்றும் மீன்களின் விலைகள் தற்போது குறைந்துள்ள நிலையில் உணவுப் பொதியின் விலை குறைக்கப்பட வேண்டும் என சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஆயிரத்து 300 ரூபாய்க்கும் அதிக விலைகளில் விற்பனை செய்யப்பட்ட மீன்களின் விலை, தற்போது 600 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றன.

பருப்பு, கிழங்கு என்பவற்றின் விலைகளும் மரக்கறிகளின் விலைகளும் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் உணவுப் பொதியின் விலைகளை குறைக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. (நி)

# தமிழரின் மத, பண்பாட்டு, கலாசாரங்களை அழிக்கும் நோக்கம் அரசிற்கு இல்லை

(கொழும்பு)

**தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மயமாக்கலை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் திட்டம் இல்லை என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.**



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் படைத்தரப்பினராலும் தொல்பொருள் திணைக்களத்தினராலும் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கல் தொடர்பிலான கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அரசாங்கத்தின் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழரின் மத, பண்பாட்டு, கலாசார அடையாளங்களை அழிக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழரின்மத, பண்பாட்டு, கலாசார அடையாளங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்வைத்துள்ள கருத்துக்கள் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சு அதிக கவனம் செலுத்தும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகும் ரணில்

## அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

அரசியலமைப்பில் மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி தயாராகி வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மக்கள் வாக்குகளின் மூலம் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி 4 வருடங்களின் பின்னர் மீண்டும் ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நடத்த முடியும். எவ்வாறாயினும் பதில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி ஒருவருக்கு தற்போதைய அரசியலமைப்பின் பிரகாரம் குறித்த சந்தர்ப்பம் வழுங்கப்படமாட்டாது.

இந்த நிலையில் பதில் ஜனாதிபதி ஒருவர் நான்கு வருடங்களின் பின்னர் ஜனாதிபதி தேர்தல் ஒன்றில் போட்டியிடும் வகையில் அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நடத்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தேசித்துள்ளார். அதற்கு தேவையான சட்ட விதிமுறைகளை அமைப்பதே குறித்த அரசியலமைப்பு திருத்தத்தின் நோக்கம் என தெரிவிக்கப்படுகின்றது.

அரசியலமைப்பில் அவ்வாறான திருத்தத்தை மேற்கொள்ளாவிட்டால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நடத்த 2025 ஆம் ஆண்டு வரை காத்திருக்க நேரிடும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

# நட்ட ஈட்டை வழங்க உதவிடுங்கள் மக்களிடம் மண்டியிட்டார் மைத்திரி

(கொழும்பு)



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கின் தீர்ப்பு தொடர்பான நட்டஈட்டை வழங்குவதற்காக, தன்னால் முடிந்தவரை தனது நண்பர்களிடம் பணம் வசூலித்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பத்தேகமவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி, இந்த நட்டஈட்டை வழங்க இன்னும் மூன்று மாதங்களே உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட காலத்திற்குள் இழப்பீடு வழங்கப்படாவிட்டால், தன்னை சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிடலாம் என்பதனால் தனக்கு உதவி செய்யுமாறும் மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார். 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு அன்று நடத்தப்பட்ட தொடர் பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதற்காக அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதன் பிரகாரம் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

EDUCATION FAIR 2023
Your Future Begins Here...

யாழ் கல்விக் கண்காட்சி 2023 !

ஏப்ரல் 1 மற்றும் 2 ஆம் திகதிகளில்
யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலில்!



வெற்றிகரமாக மூன்றாவது ஆண்டாகவும்
யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய
உயர் கல்விக் கண்காட்சி

அடையும் வரை அவை இலக்குகளே!
கிடைக்கும் வரை அவை கனவுகளே!

1st & 2nd April @ Jaffna Valampuri Hotel

அனுமதி இலவசம்!

- உயர்தரத்தின் பெறுபேறுகள் உங்கள் வெற்றிப்பயணத்துக்குத் தடை அல்ல!
- உயர்தர பரீட்சை முடிந்துவிட்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகரும் உங்களுக்கு சிறந்த தெரிவுகள்
- நீங்கள் வெளிநாட்டில் குடிபெயர அல்லது உயர் கல்வியை தொடர திட்டமிட்டிருந்தால், உங்களுக்கு சிறந்த களம்
- உலகின் சிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் உள்ளூர் உயர்கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து உங்கள் உயர் கல்விக்கான சிறந்த பாதையை தெரிவு செய்து கொள்ளுங்கள்

(இ)

Platinum Sponsor: NORTHERN UNI, SLIIT UNI
Gold Sponsors: INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY, JCL, INTERNATIONAL STUDY CENTRE
Silver Sponsors: AQUINAS COLLEGE, edlocate
Print Media Partner: வலம்புரி
Official Radio Partner: தமிழ் 99.5 99.7
Supported by
Organized by EVOLUTION
மேலதிக விபரங்களுக்கு 0778866832

# நாட்டின் அனைத்து பிரச்சினைகளுக்கும் போராட்டமே காரணம் -நாமல்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அனைத்து பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கும் போராட்டமே காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பேருவளையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

போராட்டப் பகுதியில் வழங்கப்பட்ட போதைப்பொருள் பாவனையால் சிறுவர்கள் தற்போது அதற்கு பழகி விட்டதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார். (நி)

# மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பு

(வோஷிங்டன்)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. இதன்படி, டபிள்யூ. ரி.ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 69.80 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன் பிரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்று 75.44 அமெரிக்க டொலராக சற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இதேவேளை இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலை வீழ்ச்சியை பதிவு செய்து 2.12 அமெரிக்க டொலராக காணப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கரப்பந்தாட்ட போட்டியில் பளை அதிசயம் விளையாட்டுக்கழகம் மற்றும் பாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக்கழகம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தன.
(படங்கள்-சப்தசங்கரி)

# மகளிர் இருபது- 20 கிண்ணத்தை தனதாக்கியது மும்பை இந்தியன்ஸ்




முதலாவது மகளிர் பிரிமீயர் லீக் இருபது-20 ஓவர் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் சம்பியன் ஆனது

பெண்கள் பிரிமீயர் லீக் கோப்பை யாருக்கு? என்பதை நிர்ணயிக்கும் இறுதிப்போட்டி மும்பை பிரபோர்ன் ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்தது. முதலில் ஆடிய டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 131 ஓட்டங்கள் எடுத்தது.

கப்டன் மெக் லேனிங் 35 ஓட்டங்கள் சேர்த்தார். அதிரடியாக ஆடிய ஷிகா பாண்டே, ராதா யாதவ் இருவரும் தலா 27 ஓட்டங்கள் அடித்தனர்.

இதையடுத்து 132 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணியின் தொடக்க வீராங்கனைகள் ஹெய்லி மேத்யூஸ் 13 ஓட்டங்களிலும் யஸ்திகா பாட்டியா 4 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

அதன்பின் நாட்ஷிவர் பிரண்ட்- ஹர்மன்பிரீத் கவுர் ஜோடி நிதானமாக ஆடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது. கப்டன் கவுர் 37 ஓட்டங்களில் அவுட் ஆனார். மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய நாட்ஷிவர் பிரண்ட் அரை சதம் கடக்க, மும்பை அணி 3 பந்துகள் மீதமிருந்த நிலையில் இலக்கை எட்டியது. நாட்ஷிவர் பிரண்ட் 60 ஓட்டங்களுடனும் அமலியா கெர் 14 ஓட்டங்கடனும் களத்தில் இருந்தனர். இதன் மூலம் மும்பை அணி 3 விக்கெட்டினை இழந்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இதன் மூலம் முதலாவது மகளிர் பிரீமியர் லீக் கோப்பையை மும்பை இந்தியன்ஸ் அணி வென்றுள்ளது. (6)

## மே.இந்திய தீவுக்கு எதிரான போட்டியில் சாதனை படைத்த தென்னாபிரிக்கா

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான இருபது- 20 போட்டியில் அதிக ஓட்ட ங்களை விரட்டியடித்து தென்னாபிரிக்கா அணி உலக சாதனை படைத்துள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 18 ஓவர்கள் 5 பந்துகளில் நான்கு விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

இப்போட்டியில், இரு அணிகளும் 517 ஓட்டங்களைப் பெற்றன, இது இருபது -20 போட்டியில் பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச ஓட்டங்கள் என்ற சாதனையாகும்.

அத்தோடு 20 ஓவர்கள் கொண்ட போட்டி வரலாற்றில் ஒரு அணி அதிவேகமாக 200 ஓட்டங்களை நேற்று முன்தினம் கடந்திருந்தமையும் சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2794

### குறிஞ்சிநிலா




### கேமவதி




### தாருஷா




### சாமினி




### ஜீவராஜன்




### றொபின்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வருடத்தில் 1,400 பேர் எலிக்காய்ச்சலினால் பாதிப்பு

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

**எலிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

ஒரு வருடத்தில் ஆயிரத்து 400 பேர் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் துஷானி தாபரே தெரிவித்துள்ளார்.

வயல், சதுப்பு நிலங்கள், வண்டல் நிலங்கள் மற்றும் சுரங்கங்களில் பணி புரிபவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ஙி)


# 06 ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர். ஈ.கோகுலன்



மண்ணில்: 20.02.1997
விண்ணில்: 03.04.2017

திதி: வளர்பிறை சப்தமி
28.03.2023

மண் உலகில் என் மடியில் பூத்த சிங்கங்களே
கோகுலா! ரமணா! குருபா!
உங்கள் வரவை இந்த உலகம் மகிழ்ச்சியுடன்
வரவேற்றது மீண்டும் உங்களை விண்ணிற்கு
மரணம் என்ற பெயர் சூட்டி அனுப்பி விட்டார்கள்
இப்போது தான் தெரிகிறது ஏன்
இந்த உலகம் மகழ்ச்சியுடன் உங்களை
அழைத்து வந்தது என்று
ரமணா, கோகுலா, குருபா
நீங்கள் உங்களுடன் சேர்த்து
உங்கள் அப்பாவையும் என்னிடம்
இருந்து பிரித்து உங்களிடம் எடுத்து வீட்டீர்கள்
நான் இங்கு யாருமற்ற
பாவியாக தவியா தவித்து துடியாய்த் துடிக்கிறேன்.
நான் உங்கள் நால்வரவையும் தொலைத்து
விட்டு ஏங்கித் தவிக்கிறேன் துடிக்கிறேன்
கண்கலங்கி வரும் கண்ணீரை துடைக்க
யாருமற்றவளாக புலம்புகின்றேன்
நீங்கள் சென்ற இடம் தெரியாது
இன்றும் நான் தேடுகின்றேன்
விடை கிடைக்கவில்லை என் இறுதி
மூச்சு உள்ள வரை உங்கள்
நினைவுகளுடன் வாழும் அம்மா
என் கண்ணீரை மலராக்கி உங்கள் ஆத்மா சாந்தி
அடைய காசிப் பூதவராயப் பெருமானின்
பாதத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

அன்புள்ள அம்மா



### 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.
**சுந்தரசிங்கம் ஈஸ்வரன்**

மண்ணில்: 1959.03.07
விண்ணில்: 2002.01.06



மண்ணில்: 1995.03.10
விண்ணில்: 1997.10.24

### 26 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.
**ஈ.கவிராஜ்(ரமணா)**



(15062)

### 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.
**ஈ.குருபரன் (குருபா)**

மண்ணில்: 1998.07.11
விண்ணில்: 2001.12.10


# இராசிபலன்

28.03.2023
பங்குனி 14,செவ்வாய்க்கிழமை
சப்தமி முன்னிரவு 10.04 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு- 8-18 மணிவரை
சுபநேரம் -10.44-12.14 மணிவரை
இராகுகாலம்-3.14-4.44 மணிவரை

சந்திராஷ்டமம் -
விசாகம், அனுசம்

**வளவன்**

**மேஷம்** சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புண்டு.

**ரிஷபம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வியாபார விருத்தியுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயம் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஊர்மாற்றம் இடமாற்றம் என்பன இடம்பெறலாம்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, தொழில் வருமானத்தை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தினருடன் விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**விருச்சிகம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் எடுக்கும் சூழ்நிலை ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**தனுசு** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

**மகரம்** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்** தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உறவினர் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**ஆசை பெருக பெருக அலைச்சலும் பெருகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுத் திருவிழா
## வவுனியாவில் முன்னெடுப்பு



(வவுனியா)


இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச்சபை, வவுனியா மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் கலைமகள் சனசமூக மைதானத்தில் உணவுத் திருவிழா இடம்பெற்று வருகின்றது. குறித்த நிகழ்வு நேற்று ஆரம்பமான நிலையில் இன்றும் இடம்பெறவுள்ளது. (நி-6)

# அழிவடையும் பசுமைப் பூங்காவை புனரமைக்குமாறு கோரிக்கை

(முறிகண்டி)

ஆபத்தான நிலைக்குள் கிளிநொச்சி பசுமைப்பூங்கா தள்ளப்படுவதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

கிளிநொச்சி மக்களின் பொழுதுபோக்கு வசதியை மேம்படுத்தும் நோக்குடன் "சுகித புரவர" திட்டத்தின் கீழ் 40 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த பசுமை பூங்காவானது கடந்த 2019 இல் பொது மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.



குறித்த பூங்காவில் சிறுவர்களிற்கான பொழுதுபோக்கு வசதிகள் அதிகளவில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட போதிலும், அவை தற்பொழுது படிப்படியாக அழிவடைந்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், குறித்த பூங்காவை புனருத்தானம் செய்ய கரைச்சி பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர். (நி-6-100)

# 'சீனக் கடலட்டை எமக்கு வேண்டாம்'
## கடற்றொழிலாளர்கள் கவனயீர்ப்பு




(அராலி)

கடலட்டை பிடிப்பதைக் கண்டித்து, கவனயீர்ப்பு வாழ்வாதார போராட்டம் ஒன்றை பூநகரி கந்தலடி கடலில் நேற்று முன்தினம் பாசையூர் கடற்றொழிலின் கூட்டுறவுச் சங்கத்தின் கடற்றொழிலாளர்கள் படகில் முன்னெடுத்தனர்.

இது தொடர்பாக பாசையூர் கடற்றொழிலின் கூட்டுறவுச் சங்கத்தின் கடற்றொழிலாளர்கள் மேலும் தெரிவிக்கையில், கடந்த மூன்று தலைமுறைகளாக பாரம்பரிய சிறகுவலைகளை மேற்கொண்டு வருகிறோம். இலங்கையின் நாரா நிறுவனம் கடலில் சீன கடலட்டை வளர்ப்புக்கு இடங்களை அடையாளப்படுத்துகின்றனர்.

இது தொடர்பில் பாரம்பரிய சிறகுவலை தொழிலாளர்களுடன் எந்தொரு கலந்துரையாடலினை முன்னெடுக்கவில்லை.

இந்த நிறுவனம் கடல் ஆய்வுகளையும் மேற்கொள்கின்றனர். இங்கு 100 சிறகுவலை மீனவர்கள் தொழில் செய்கின்றனர். பாசையூர் குருநகர்ப் பகுதியை சேர்ந்த இவர்கள் இந்த நடவடிக்கைகளால் பெரும் பாதிப்பை சந்திக்கின்றனர் என அவர்கள் தெரிவித்தனர். (நி-6-104)



யாழ்.தொழில்நுட்ப கல்லூரியின் வைர விழா நிகழ்வானது நேற்று காலை கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. (படம் :கஜிந்தன்)

# சாரதிகள் வாய்த்தர்க்கம் பயணிகள் அசௌகரியம்

(கரணவாய்)

நெல்லியடி பகுதியில் நாவலமட சந்தியில் அரச பேருந்து சாரதிக்கும் தனியார் பேருந்து சாரதிக்கும் நேற்று முன்தினம் ஏற்பட்ட வாக்குவாதத்தில் இரு பேருந்துகளிலும் பயணம் செய்த பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

குறித்த இரு பேருந்து சாரதிகளும் ஒருவரை ஒருவர் முந்தி சென்றவேளை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் பயணிகளை வேறு வாகனங்களில் பயணம் செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்ட பின்னர் இரு சாரதிகளுக்கும் நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி காஞ்சன விமல வீர எச்சரிக்கை விடுத்தார். (நி-6-60)

# 5 வயதுச் சிறுவனுக்கு
## 'ஈழத்து ஞானக்குழந்தை' விருது வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஐந்து வயதுச் சிறுவனுக்கு ஈழத்து ஞானக்குழந்தை எனும் விருது முதன்முதலாக வழங்கி வைக்கப்பட்டது. உருத்திர சேனை ஏற்பாடு செய்த திருவள்ளுவர் திருவுருவ வெளியீட்டு விழா யாழ். இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறுவன் அருணனால் திருவள்ளுவரின் ஆதங்கம் எனும் கருப்பொருளில் திருக்குறள் மற்றும் அதன் விளக்கம் என்பன எடுத்துரைத்து காட்டப்பட்டது. ஐந்து வயதில் இந்த சிறுவனின் அதீத ஆற்றல் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி உள்ளது.

இதன்போது குறித்த சிறுவனுக்கு ஈழத்து ஞானக்குழந்தை எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

# மஹாயாகம்

(யாழ்ப்பாணம்)

நவாலி அட்டகிரி சிவன் தேவஸ்தானத்தில் சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் மஹாயாகம் நடைபெறும். (நி-6)



உருத்திர சேனையின் ஏற்பாட்டில் திருவள்ளவர் திருவுருவ வெளியீட்டு விழா யாழ்.இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இதன்போது திருவள்ளுவரின் திருவுருவப்படம் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன.(படம்: சிவசாந்தன்)

# கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

யா/ஊரெழு கணேச வித்தியாசாலையில் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள்விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் இ.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி. லோகாம்பிகை றகுநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)

# அராலியில் விபத்து ஒருவர் படுகாயம்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி பாலத்தடியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த சுரேஷ்குமார் நிக்சன் (வயது 27) என்பவரே மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-104)

# சனீஸ்வர சாந்தி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயிலில் சனீஸ்வர சாந்தி ஹோமம் ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து அபிஷேகம், பூஜை, அர்ச்சனை வழிபாடுகள் இடம்பெறும். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசெம்பருக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படும்

## மகிந்த நம்பிக்கை

(கொழும்பு)

டிசெம்பருக்கு முன்னர் தேர் தல் நடத்தப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய மகிந்த ராஜபக்ஷ டிசெம்பரில் அல்லது அதற்கு முன்னதாக தேர்தல் நடக்கும் என நம்புவதாக தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் அல்லது ஜனாதிபதித் தேர்தலாக இருந்தாலும், தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீண்டும் ஒன்றிணைந்து தேர் தலை வெற்றிகரமாக எதிர் கொள்ளும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (நி)



# தேசபந்து தென்னகோன் மீதான நீதிப் பேராணை நிராகரிப்பு

(கொழும்பு)

காலிமுகத்திடல் கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் மீது, தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில், சந்தேக நபராக மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்ன கோனிடம் வாக்கு மூலம் பதிவு செய்து நீதிமன்றில், முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிடக்கோரி, தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனுவை மேன் முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

குறித்த நீதிப்பேராணை மீதான விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதியரசர், நிஷங்க பந்துல கருணா ரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதன்போது, பிரதிவாதியான தேசபந்து தென்ன கோன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி முன்வைத்த சமர்ப்பணங்களை நீதியரசர்கள் குழாம் ஆராய்ந்தது.

இதனையடுத்து, குறித்த நீதிப்பேராணை மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தது. (நி)

# தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு ஊதியக் குறைப்பு

## அமைச்சர் மனுஷ நாணயக்கார

(கொழும்பு)

தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்ட அரச மற்றும் ஏனைய அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு நாள் ஊதியக் குறைப்பை விதிக்க தொழிலாளர் அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இந்த விடயத்தை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் வைத்து அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து ஊழியர்களுக்கும் எதிராகத் தேவையான சட்ட நடவடிக்கையும் அமைச்சினால் மேற்கொள்ளப்படும்.

அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை சீர்குலைக்கும் நடவடிக்கை எதிர்காலத்தில், அரசியல் நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் அரச நிறுவ னங்களின் செயற்பாடுகளை சீர்குலைக்க சில பிரிவுகள் மேற் கொள்ளும் முயற்சிகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்தந்த தொழிலில் உள்ள சில பிரச்சினைகள் தொடர்பான தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்வது வேறு விடயம். எனினும், இவை அரசியல் உள்நோக்கம் கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகளாகும்.

தொழிலாளர் அமைச்சர் என்ற முறையில் உண்மையான தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு எனது ஆதரவை வழங்குவேன்.

எனினும் அரசியல் உள்நோக்கம் கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் அரசத்துறை வேலைகளில் சேர அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார். (நி)

# மீண்டும் சு.கவில் இணைய நிமல் குழு பேச்சுவார்த்தை



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து விலகி அரசாங்கத்துடன் இணைந்து சுயாதீனமாகச் செயற்படும் அமைச்சர்கள் குழு, மீண்டும் கட்சியில் இணைவது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சுகளை ஆரம்பித்துள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவினரே இது தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்று வருகின்றனர்.

இந்த கலந்துரையாடலின் அடிப்படையில் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகம் தயாசிறி ஜயசேகரவிடம் ஊடகங்கள் கேட்டபோது, இவ்வாறான கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன என தெரிவித்தார். (நி)

# 70 வீதமான மின்சாரத்தை உற்பத்தி செய்வதே இலக்கு

## நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் 70% மின்சாரத்தை உற்பத்தி செய்வதே இலக்கு என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட காலநிலை சுபீட்ச திட்டம் நாட்டின் காலநிலை ஸ்திரமின்மைக்கு மத்தியிலும் தொடர்ச்சியான வளர்ச்சியை காட்டுவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவில் பேசும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மன்றத்தின் மூலம், நிலையான வளர்ச்சி சவால்களுக்கு தீர்வு காண்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 150 | 180 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 | 300 |
| தக்காளி | 160 | 140 | 180 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 160 | 200 |
| கோவா | 80 | 100 | 100 | 160 |
| கரட் | 100 | 180 | 200 | 240 |
| பூசணி | 60 | 80 | 60 | 60 |
| புடோல் | 150 | 140 | 150 | 160 |
| வாழைக்காய் | 160 | 150 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 120 | 120 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 240 | 300 | 200 | 320 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 100 | 160 |
| பயற்றங்காய் | 150 | 150 | 160 | 150 |
| லீக்ஸ் | 260 | 240 | 280 | 320 |
| பீற்றூட் | 130 | 120 | 160 | 160 |
| கறிமிளகாய் | 300 | 300 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 1600 | 1000 | 1200 |
| போஞ்சி | 200 | 200 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 140 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 350 | 250 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 80-110 |
| இராசவள்ளி | 300 | 300 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 160 | 120 | 200 | 300 |
| முள்ளங்கி | 60 | 100 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 120 | 120 | 120 |

# தமிழ் மக்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதில் உறுதியாக உள்ளேன் - ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த தான் பணியாற்றி வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹார்வட பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த வாரம் நடைபெற்ற நேர்காணலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்துக்காக முன்னின்றதால் தேர்தலில் தோல்வி கண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தமிழ் கட்சிகளுடன் கலந்துரையாடி வருவதாகவும் அதேவேளை புலம்பெயர் மக்களுடன் பேச்சு நடத்தவும் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 138





"என்ன கேள்விப்பட்டாய்?"

"சக்கரவர்த்திக்கு விரோதமாக ஒரு சதி நடக்கிறதென்றும் சக்கரவர்த்தியின் திருக்குமாரர்களுக்கு விரோதமாக இன்னொரு சதி நடக்கிறதென்றும் கேள்விப்பட்டேன்."

சின்னப் பழுவேட்டரையர் தம் வஜ்ரப் பற்களினால் உதட்டைக் கடித்துக் கொண்டார். இந்தச் சிறு அறியாப் பையனுடன் பேச்சுக் கொடுத்ததில் தமக்கே இத்தனை நேரமும் தோல்வி என்பதை உணர்ந்தார். ஏறக்குறைய அவனுடைய குற்றச் சாட்டுகளுக்குத் தாம் பதில் சொல்லிச் சமாளிக்கும் நிலைமை வந்து விட்டது! எனவே, பேச்சை அத்துடன் வெட்டிவிட விரும்பினார்.

"உனக்கென்ன அதை பற்றிக் கவலை? எல்லாச் சதிகளையும் உடைத்துச் சோழ குலத்தைப் பாதுகாக்க நாங்கள் இருக்கிறோம். உன்னுடைய கோரிக்கையைச் சொல்லு. உன் பழைய ஆடைகள் உனக்கு வேண்டும் அவ்வளவுதானே!" என்றார்.

"என் பழைய ஆடைகளும் வேண்டும் அவற்றுக்குள் இருந்த பொருட்களும் வேண்டும்."

"என்ன பொருட்கள் என்று இன்னமும் நீ சொல்லவில்லையே!"

"சொல்லத்தான் வேண்டுமானால் சொல்லுகிறேன். அதன் பொறுப்பு தங்களைச் சார்ந்தது. இளவரசர் சக்கரவர்த்திக்குக் கொடுத்திருந்த ஓலையைத் தவிர இன்னொரு ஓலையும் என்னிடம் கொடுத்திருந்தார்"

"இன்னொரு ஓலையா! யாருக்கு? நீ சொல்லவே இல்லையே!"

"அந்தரங்கமானபடியால் சொல்லவில்லை நீங்கள் இப்போது வற்புறுத்துகிறபடியால் சொல்லுகிறேன். பழையாறையிலுள்ள இளையபிராட்டி குந்தவை தேவிக்கு இளவரசர் ஓலை ஒன்று கொடுத்தார்!"

"ஓஹோ! அப்படியானால், நாளைக்குச் சக்கரவர்த்தி கொடுக்கும் திருமுகத்தை நீ உடனே எடுத்துக் கொண்டு காஞ்சிக்குப் போக முடியாது. இளைய பிராட்டிக்கு இளவரசர் ஓலை அனுப்பும்படி இப்போது என்ன அவசரம் நேர்ந்ததோ?"

"தளபதி! நான் பிறருக்கு எழுதப்படும் ஓலையைப் படிப்பதில்லை. சக்கரவர்த்தியின் ஓலையைப் படித்தது போல் இதையும் நீங்கள் படிப்பதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபம் கிடையாது. அந்தப் பொறுப்பு தங்களுடையது. என் உடையிலிருந்த பொன்னும் ஓலையும் களவு போகாமல் என்னிடம் திரும்பி வந்தால் போதும்."

"அதைப் பற்றி பயம் வேண்டாம். நானே பார்த்து எடுத்து வருகிறேன்" என்று சின்னப் பழுவேட்டரையர் நடந்தார். அவர் பின்னோடு வந்தியத்தேவனும் தொடர்ந்தான்.

அதையறிந்த கோட்டைத் தளபதி கண்களினால் சமிக்ஞை செய்யவே ஐந்தாறு வேல் பிடித்த வீரர்கள் வந்து வாசற்படி யண்டை குறுக்கே நின்றார்கள். அவர்களுடன் சண்டை பிடிப்பதில் அனுகூலம் ஒன்றுமில்லையென்று கருதி வந்தியத்தேவன் அங்கேயே நின்றான்.

"ஆம், தம்பி! பழையாறையிலிருந்து சக்கரவர்த்தியை நாங்கள் இங்கே அழைத்து வந்து கட்டுக் காவலுக்குள் வைத்திராவிட்டால், இத்தனை நாளும் என்ன விபரீதம் நடந்திருக்குமோ, தெரியாது. பாண்டிய நாட்டுச் சதிகாரர்களின் நோக்கம் நிறைவேறியிருந்தாலும் இருக்கலாம்."


"ஆ! தாங்கள்கூட அவ்விதமே சொல்கிறீர்களே! அப்படியானால் நான் கேள்விப்பட்டது உண்மையாகத்தான் இருக்க வேண்டும்!"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## அன்பின் மதிப்பு



குணசீலன் என்கிற அரசன் ஒருவன் நோய்வாய்ப்பட்டு, பல நாட்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவனைப் பார்க்க தினமும் பல பிரமுகர்கள் வந்துகொண்டிருந்தனர்.

ஒருநாள், சில பெரிய மனிதர்கள் பலவித பழங்களைக் கொண்டு வந்து மன்னனிடம் கொடுத்துப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது, ஒரு விவசாயி தன்னைத் தடுத்த காவலாளிகளையும் பொருட்படுத்தாமல், மன்னனின் படுக்கையருகே வந்து நின்றான்.

அவனது கலைந்த தலைமுடியும் ஆடையில் படிந்திருந்த தூசியும் அவன் தன் கிராமத்திலிருந்து வெகுதூரம் நடந்து வந்திருக்கிறான் என்பதை அறிவித்தன.

அவன் மன்னனிடம், "அரசே".. உங்கள் உடல் தேற வேண்டுமென்று எங்கள் ஊர் மாரியம்மனுக்குப் பொங்கல் படைத்தேன். அந்தப் பிரசாதத்தைக் கொண்டு வந்திருக்கிறேன் ஏற்றுக் கொள்ளுங்கள். அம்மன் பிரசாதத்தைச் சாப்பிட்டால் எந்த நோயும் பறந்து ஓடிவிடும்" என்றான்.

அவன் பிரசாதத்தை வெளியே எடுத்ததும் அது கெட்டுப் போன நாற்றம் அடித்தது. அங்கிருந்த பிரமுகர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டார்கள்.

முகம் சுளித்தார்கள். அரசனோ, பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு, தன் கழுத்தில் இருந்து முத்து மாலையைக் கழற்றி எடுத்து, அந்த விவசாயிக்கு பரிசளித்து அனுப்பினான்.

மன்னனுக்கு வேண்டிய பிரமுகர் ஒருவர், "அரசே, கெட்டுப் போன பொங்கலுக்கா முத்து மாலைப் பரிசு?" என்று கேட்டார்.

மன்னனோ, "அது கெட்டிருந்தாலும் அந்தப் பிரசாதத்தை நான் சாப்பிட்டுக் குணமடைய வேண்டும் என்று விரும்பி கள்ளங் கபடமற்ற மனதுடன் தன் கிராமத்திலிருந்து ஒரு வாரம் நடந்து வந்திருக்கிறான்.

அவனது அன்பு உண்மையானது. போலித்தனம் இல்லாதது. உண்மையான அன்புக்கு மதிப்பு மிக அதிகம். நான் அளித்த முத்து மாலை கூட அவனது அன்புக்கு ஈடாகாது" என்று கூறினான்.

நமது அன்பு உண்மையாக இருந்தால், கடவுளே கையைக் கட்டிக் கொண்டு, நமக்கு சேவை புரிய வந்து நிற்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம் என்பது கொடிய அமிலம். அது விழும் இடத்தைவிட இருக்கும் இடமே பெரிதும் நாச மாகும். ~ கிளெண்டல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாவலர் கலாசார மண்டபம் யாருக்கு? இந்து அமைப்புகளின் கருத்தை அறிக!

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தின் உரிமம் தொடர்பில் நிலவுகின்ற சிக்கல்கள் ஏலவே அறியப்பட்டவை.

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபம் என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வாழ்ந்த அவரின் சொந்தக் காணியில் அமைந்துள்ளது.

அதேநேரம் நாவலர் கலாசார மண்டபத்தை இந்து கலாசார அமைச்சு நிர்மாணித்திருந்தது.

செல்லையா இராசதுரை அவர்கள் இந்து கலாசார அமைச்சராக இருந்தபோது, நாவலர் கலாசார மண்டபம் நிர்மாணிக்கப்பட்டதுடன் இரு தளங்களைக் கொண்ட அக் கலாசார மண்டபத்தின் மேற்தளத்தில் இந்து கலாசார நூலகமும் கீழ்த்தளத்தில் சமய நிகழ்வுகளுக்கான கேட்போர்கூடமும் அமையப் பெற்றுள்ளது.

எனினும் போர்க்கால சூழ்நிலையில், நாவலர் கலாசார மண்டபத்தின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு விவகாரங்களைக் கவனிக்கும் பொறுப்பு யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் தற்காலிகமாக வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபை நாவலர் கலாசார மண்டபத்தைப் பொறுப்பேற்கும்போது, மண்டபத்தின் மேற்தளத்தில் இயங்கிய இந்து கலாசார நூலகத்தில் இந்து சமயம் சார்ந்த ஏகப்பட்ட புத்தகங்கள் இருந்ததுடன் நாவலர் கலாசார மண்டபத்தின் வளாகத்தை பல்வகை நிறங்கள் கொண்ட குறோட்டன் செடிகள் அலங்கரித்திருந்தன.

எனினும் இந்தக் கவின் நிலை, யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பேற்று சில வருடங்கள் மட்டுமே நின்று நிலைத்தன.

அதன் பின்னர் மண்டபத்தின் கவின்நிலை அழிவுற்றதுடன் மேற்தளத்தில் இயங்கிய இந்து கலாசார நூலகமும் காணாமல் போயிற்று.

பின்னாளில் நாய்களுக்குத் தடை மருந்தேற்றல், விழாக்கள் நடத்தி மாமிச உணவு பரிமாறல், தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா வருகின்றவர்கள் அந்த மண்டபத்தில் தங்கவும் மாமிச உணவுகளைச் சமைத்து உண்ணவும் தமது உடுபுடைவைகளை மண்டபத்தின் மேற்தளத்தில் உலர விடுவதற்கும் யாழ்.மாநகர சபை அனுமதித்தது.

இச்செயல் சைவ மக்களை அதிலும் குறிப்பாக நாவலர் பெருமானைப் போற்றி வணங்குகின்ற அன்பர்களைக் கடுமையாகத் தாக்கியது.

இத்தாக்கத்தின் விளைவு நாவலர் கலாசார மண்டபத்தை யாழ்.மாநகர சபையிடம் இருந்து மீட்டெடுக்க வேண்டும் என்ற கருத்து ஏற்படலாயிற்று.

இந்த இடத்தில் இப்போது மீளவும் நாவலர் கலாசார மண்டப விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில், அந்த மண்டபம் தொடர்பில் ஆளுநர் என்ன முடிவை எடுப்பதாக இருந்தாலும் இந்து அமைப்புகளைக் கூட்டி அவற்றின் முடிவை அறிந்து தீர்மானிப்பதுதான் சிறந்த தீர்வாக இருக்கும்.

# அமைதியாக போராட்டம் நடத்த அனைவருக்கும் உரிமை உண்டு

## ஜனாதிபதி ரணில்

ஜனாதிபதி என்ற வகையில் தடுப்புக் காவல் வழங்கும் அதிகாரத்தை பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு என்றும், அமைதியான போராட்டம் என்று கூறப்படுவது வன்முறையாக மாறினால் பிரச்சினை ஏற்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்ற சர்வதேச கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

## மூளைச்சாவடைந்த நிலையில் 7 பேரை வாழ வைத்த 19 வயது மாணவி

குருநாகல் பகுதியில் மூளை புற்று நோய் காரணமாக மூளைச்சாவடைந்த மாணவியொருவர் தனது உடல் உறுப்புகளை வழங்கி 7 பேரின் உயிரைக் காப்பாற்றிய நெகிழ்ச்சியான சம்பவமொன்று பதிவாகியுள்ளது. இலங்கையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்கள் குழுவொன்று அண்மையில் இதயம் மற்றும் நுரையீரல் இரண்டையும் ஒரே நோயாளிக்கு மாற்றுவதற்கான முதல் சத்திர சிகிச்சையை மேற்கொண்டு சாதனை படைத்துள்ளது.

குருநாகல் பகுதியில் மகளிர் கல்லூரியில் உயர்தரம் கல்வி பயின்ற 19 வயதுடைய மாணவியொருவர் மூளைச்சாவு காரணமாக உயிரிழந்துள்ளார். மூளை புற்று நோய் காரணமாக மூளைச்சாவு ஏற்பட்டு அவர் உயிரிழந்ததாக மருத்துவப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. வெளியில் எந்த அறிகுறியும் காட்டாமல் தொடங்கிய புற்றுநோயினால் அவரது மரணம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

மேலும் குடும்ப உறுப்பினர்களின் விருப்பத்திற்கிணங்க விஹகனாவின் உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு தானம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறித்த மாணவி இறந்த பின் தனது உடல் உறுப்புகளைத் தானம் செய்யும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## நூல் வெளியீடு

மகாஜனக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் கவிஞருமான செ.கதிரேசர்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு நிகழ்வும் "கதிரேசர் கவிதைகள்" நூல் வெளியீடும் எதிர்வரும் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கல்லூரி அதிபர் க.மணிசேகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையினை யாழ்ப்பாண பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கம் அவர்களும். நூலின் மதிப்புரையினையும் நூல் வெளியீட்டினையும் யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல் துறை விரிவுரையாளர் இராஜேஸ் கண்ணன் மற்றும் வலிகாமம்கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் பா.மகாலிங்கம் அவர்களும் ஆற்றவுள்ளனர். (ம-7,9)

## பாராளுமன்ற அமர்வை மட்டுப்படுத்த தீர்மானம்

அடுத்த வாரத்திற்குரிய பாராளுமன்ற அமர்வு ஒருநாளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் எதிர்வரும் ஏப்ரல் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 முதல் மாலை 5 மணிவரை மாத்திரம் பாராளுமன்ற அமர்வு இடம்பெறவுள்ளது.

சபாநாயர் மகிந்தயாப்பா அபேவர்தன தலைமையில் அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற செயற்பாடுகள் தொடர்பிலான செயற்குழு கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 18 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் நடைபெறவிருந்த பாராளுமன்றத்தின் இரண்டாவது வார அமர்வினை ஏப்ரல் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் ஏப்ரல் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை முன்னெடுக்கவுள்ளதாக பாராளுமன்றத்தினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,9)

## இரத்தினபுரியில் இளம் பெண் ஒருவர் படுகொலை

இரத்தினபுரி பகுதியில் இளம் பெண் ஒருவர் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நிரியல்ல பிரதேசத்தில் வசிக்கும் 25 வயதுடைய யுவதியே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று காலை 6.30 மணியளவில் குறித்த யுவதி தனது பணியிடத்திற்கு செல்வதற்காக வீட்டை விட்டு வெளியேறியதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இந்த கொலை தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

## இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி திங்கட்கிழமை (27) சற்று குறைவடைந்துள்ளதாக மத்திய வங்கி தரவுகள் தெரிவிக்கின்றன.

[illegible] விலை 314 ரூபாய் 82 சதமாகவும் விற்பனை விலை 332 ரூபாய் 58 சதமாகவும் பதிவாகியுள்ளது.

வெள்ளிக்கிழமை (21) வெளியான நாணய மாற்று விகிதங்களின்படி, டொலரொன்றின் கொள்வனவு விலை 314 ரூபாய் 72 சதமாகவும் விற்பனை விலை 331 [illegible] சதமாகவும் [illegible] இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## புலோலியில் ஆசிரியையின் வீட்டில் பட்டப்பகலில் திருட்டு இருவர் கைது

(கரணவாய்)

பட்டப்பகலில் ஆசிரியையின் வீட்டின் கதவை உடைத்து 3 3/4 பவுண் தங்க நகை மற்றும் வெளிநாட்டு நாணயங்களை திருடிய இரண்டு சந்தேக நபர்கள் பருத்தித்துறை பொலிஸாரால் அதிரடியாக ஒரு மணித்தியாலத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை (27) புலோலி, காந்தியூர் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

காலையில் வீட்டார் வெளியில் சென்றதை சாதகமாகப் பயன்படுத்தி வீட்டின் பின் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த ஒரு காப்பு, ஒரு சங்கிலி, ஒரு கைச் சங்கிலி, 1 நெக்லஸ் அடங்கலாக 3 3/4 பவுண் நகைகள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களையும் திருடிச் சென்றனர்.

பிற்பகல் 2.00 மணியளவில் வீட்டார், வீட்டிற்கு வந்த போதே திருட்டு இடம்பெற்றமை தெரியவந்தது.

இதனையடுத்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் உடனடியாக முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து ஒரு மணித்தியாலத்தில் திருடப்பட்ட நகைகளை மீட்டதுடன் இரண்டு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்தனர். (ம-7,9,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண் திறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா?

# ஆதிலிங்கம் உடைக்கப்பட்டமையை கண்டித்து யாழ்.பல்கலையில் கவனயீர்ப்புப் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

வெடுக்குநாறி மலையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆதிலிங்கம் உடைக்கப்பட்டமையைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்று நடைபெற்றது.

நேற்று திங்கட்கிழமை மதியம் ஒரு மணியவில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது குறித்த போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் மண் திறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா, வெடுக்குநாறி மலை, கச்சதீவு, நெடுந்தீவு எங்கள் சொத்து, காவிகளின் அட்டகாசத்துக்கு முடிவில்லையா, இராணுவமே வெளியேறு, கடற்படையே வெளியேறு, எமது நிலம் எமக்கு வேண்டும், தொல்பொருட்திணைக்களமே வெளியேறு போன்ற கோஷங்கள் இதன் போது எழுப்பப்பட்டன.(நி-6-33)

# தமிழர்கள் மீதான இன அழிப்பே வெடுக்குநாறி மலை ஸ்தலத்தின் சிதைப்பு

## சட்டத்தரணி வி.மணிவண்ணன்



(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தின் வடக்கு எல்லைக் கிராமமான ஒலுமடு வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் அனைத்தும் உடைத்து எறியப்பட்டதும் மலை உச்சியில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கம் புதருக்குள் தூக்கி வீசப்பட்டதும் மிக மிலேச்சத்தனமான செயலாகும் என யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் பண்பாட்டு பாரம்பரிய வாழ்விடங்களையும் வழிபாட்டு இடங்களையும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு உட்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் ஒரு திட்டமிடப்பட்ட இன அழிப்பின் தொடர்ச்சியே ஆகும்.

குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளைகளையும் உதாசீனப்படுத்தி பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருகையில் தமிழ்ர்களின் பண்பாட்டு பாரம்பரிய வழிபாட்டுத்தலமாக வெடுக்குநாறி மலையில் இருந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் தகர்த்தெறியப்படுகின்றன.

ஒரு இனத்தின் மொழியையும் அதன் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் அழித்தால் அவ்வினம் தானாகவே அழிந்துவிடும் என்பதற்கு உட்பட்டே இவ்வாறான பண்பாட்டு இனஅழிப்பு நடவடிக்கைகள் எமது மண்ணில் வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்து அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

இதற்கு எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிப்பதுடன் எமது இனத்தின் இருப்பினை பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்று பட்டு நிற்க வேண்டும் என்பதனை காலம் உணர்த்தி நிற்கின்றது எனத் தெரிவித்தார். (நி-6)

# ஆதிலிங்கம் உடைக்கப்பட்டமை தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(குருமன்காடு)

வவுனியா, நெடுங்கேணி, வெடுக்குநாறி மலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த விக்கிரகங்கள் உடைத்து அழிக்கப்பட்டமைக்கு எதிராக ஆலய நிர்வாகத்தினரால் வவுனியா பிராந்திய மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டை வழங்கிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஆலயத்தின் நிர்வாகத்தினர்,

ஆலயத்திற்குள் செல்வதற்கு தொல்லியல் திணைக்களத்தால் எமக்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் அந்த திணைக்களத்தின் வாகனங்களே அங்கு தொடர்ச்சியாக சென்று வந்தது.

எனவே இந்தச்சம்பவத்தின் பின்னணி தொடர்பாக தொல்லியல் திணைக்களத்தின் மீதே நாம் சந்தேகம் கொள்கின்றோம். மனித உரிமை ஆணைக்குழுவிலும் அவர்களுக்கு எதிராகவே எமது முறைப்பாட்டை பதிவு செய்திருக்கின்றோம் மேலும் மனித உரிமை ஆணைக்குழுவினர், இன்று வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்திற்கு விஜயம் செய்து நிலைமைகளை பார்வையிட உள்ளதாக மனித வரிமை ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.

இதேவேளை, விக்கிரகங்கள் அழிக்கப்பட்ட விடயம் தொடர்பாக நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திலும் ஆலய நிர்வாகத்தினரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்த க்கது. (நி-6-250)

# தொடர்ந்து ஆக்கிரமிக்கப்படும் இந்துக்களின் புனித ஸ்தலங்கள்

## சிவசேனை அமைப்பு கண்டனம்

(அராலி)

வெடுக்குநாறி ஆதிசிவனை பிடுங்கி வீசியதை கண்டிப்பதோடு அரசு வேடிக்கை பார்க்காமல் உரிய இடத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென சிவசேனை அமைப்பின் தலைவர் சச்சிதானந்தன் கோரிக்கை விடுத்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற வெடுக்குநாறி ஆதிசிவன் பிடுங்கி வீசப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேற்கொள்ளப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்துக்களின் புனித ஸ்தலங்கள் தொடர்ச்சியாக மத வெறியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறான நிலையில் அமைதியான சூழலை விரும்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பிடுங்கிய ஆதி சிவனை உரிய இடத்தில் பிரதிஷ்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் சிவசேனை தொண்டர்கள், உருத்திர சேனை அமைப்பின் தொண்டர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (நி-6-104)

# வெடுக்குநாறி மலை இன்று கண்ணீர் வடிக்கிறது

## சர்வதேச இந்து இளைஞர் பேரவை

(நெளுக்குளம்)

இனவழிப்புகளை தொடர்ந்து சமய அழிப்புகள் தொடர்கின்ற செயல் மிக வேதனை தருகிறது என சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சிவஸ்ரீ ஜெ.மயூரக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குருந்தூர் மலையில் கம்பீரமாக விகாரை நிற்கிறது. ஆனால் வெடுக்குநாறி மலை கண்ணீர் வடிக்கிறது.

உடனடியாக அழிக்கப்பட்ட சிலைகள் உடனடியாக நிறுவபட வேண்டும். புதிய கோவில் மீள அமைப்பட வேண்டும். அழித்தவர்கள் உடனடியாக சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும்.

உலகத்தில் வாழும் அத்தனை சைவர்களையும் மனவிரக்திக்கு ஆளாக்கிய இச்செயல் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சிய செயலாகவே காணப்படுகிறது.

ஆகவே சமயப் பெரியார்கள் சமய நிறுவனங்கள் மற்றும் குருமார்கள் சார்ந்த அமைப்பு கள் விரைந்து இதற்கான நட வடிக்கைகளை செய்ய வேண் டும் அல்லாது போனால் இச் செயற்பாடுகள் தொடரும். (நி-6-299)

# மத நல்லிணக்கத்திற்கு பாரிய ஊறு விளைவிக்கும் செயலாகும்

## அகில இலங்கை சைவ மகாசபை

(யாழ்ப்பாணம்)

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் சிலைகள் உடைக்கப்பட்டும் சிவலிங்கம் காணாமல் செய்யப்பட்ட செயலையும் அகில இலங்கை சைவ மகா சபை வன்மையாக கண்டிக்கின்றது.

காரணமானவர்கள் கண்டறியப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின் முன்நிறுத்தப்பட்டு சிவலிங்கமும் சிலைகளும் மீள நிறுவப்பட வேண்டும்.

ஏற்கனவே கடந்த காலங்களில் வழிபாட்டிற்கு பல இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டு பின்னணியில் மேற்படி சம்பவத்தை மத நல்லிணக்கத்திற்கு பாரிய ஊறு விளைவிக்கும் இச்செயலை உரிய நோக்கில் அரசு அணுகி தீர்வு காண வேண்டும்.

ஆதி சிவன் கோவில்கள் மீதான தொடர் விரும்பத்தகாத செயற்பாடுகள் தமிழ்ச் சைவர்களின் மனதை ஆழமாக பாதித்து வருகின்றது.

இந்த விடயத்தில் அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் செயலூக்கத்துடன் கூடிய எதிர்ப்பை வெளிகாட்ட வலியுறுத்துகின்றோம். (நி-6-33-104)

# பேரினவாத நடவடிக்கைகளை உடன் நிறுத்துங்கள்

## மனோ டுவிட்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேரினவாத நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய சிலைகள் உடைக்கப்பட்டு, வீசப்பட்டுள்ள நிலையில் அதற்கு கண்டனம் தெரிவித்து டுவிட்டரில் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். தொல்பொருள் திணைக்களம், தொல்பொருளை பாதுகாப்பது என கூறிக்கொண்டு இந்துக்கள், இக்கோவிலுக்கு போவதை தடுக்க வேண்டும்.

மேலும் இராணுவ பாதுகாப்பு வலயத்தில் இடம்பெறும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு மனோ கணேசன் கண்டனம் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தர்...

யைச் சேர்ந்த 23 வயதான ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு குளத்திற்கு அருகாமையில் உள்ள மரமொன்றில் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம்மீட்கப்பட்டு மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,9,30)

## இளைஞன்...

தில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7,9,104)

## மிருசுவிலில்...

ஆட்களை இறக்கிவிட்டு வவுனியா நோக்கிப் பயணித்த ஹயஸ் வாகனமே இவ்வாறு மிருசுவில் இராணுவ முகாமை அண்மித்த ஏ9 வீதியில் வீதியோரம் காணப்பட்ட மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது வான் சாரதியான ஏ9 வீதி பரந்தனைச் சேர்ந்த 27 வயதான குமாரசாமி கஜன் என்பவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-7,9,30,33,100,316)

## கச்சதீவில்...

இது தொடர்பில் கடற்படையால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில்,

கச்சதீவானது சுமார் 50 கடல் மைல் தொலைவில் உள்ள மக்கள் வசிக்காத தீவொன்றாகும். இத்தீவின் பாதுகாப்புக் கருதி கடற்படைக் குழுவொன்று அங்கு கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றது.

இத்தேவாலயமானது வருடாந்தப் பெருவிழாவின்போது மாத்திரமல்லாது தினமும் சுத்தம் செய்யப்பட்டு, விளக்குகள் ஏற்றப்பட்டு, மிகுந்த பக்தியுடன் கடற்படையினர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதியில் பணிபுரியும் கடற்படையினர்களில் பெரும்பான்மையானவர்கள் பௌத்தர்கள் என்பதால், அவர்களின் வழிபாட்டு நடவடிக்கைகளுக்காகவே ஒரு சிறிய புத்தர் சிலையொன்று கடற்படையினரின் இல்லத்திற்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், புனித அந்தோனியார் தேவாலயத்தைத் தவிர, இத்தீவில் வேறு எந்த மத வழிபாட்டுத்தலமும் இல்லை, எதிர்காலத்தில் எந்த ஒரு விகாரையையும் கட்ட கடற்படை முயற்சி செய்யாது" இவ்வாறு கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ம-7,9)

## மாபெரும்...

கான கோரிக்கையினை வலுப்படுத்த ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7,9,250)

## 450 எரிபொருள்...

வழங்கப்படவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் எரிபொருள் விற்பனை சந்தையில் நுழைவதற்கு மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்று டுவிட்டர் பதிவின் ஊடாக இதனைத் தெரிவித்துள்ளார்.

சீனாவின் சினோபெக், அவுஸ்திரேலியாவின் யுனைடெட் பெற்றோலியம் மற்றும் அமெரிக்காவின் ஆர்எம் பார்க்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு சர்வதேச எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனமான ஷெல் பிஎல்சியுடன் இணைந்து இலங்கையில் எரிபொருள் விற்பனை சந்தையில் நுழைவதற்கான உரிமங்கள் வழங்கப்படவுள்ளன.

குறித்த மூன்று நிறுவனங்களும் இலங்கையில் இயங்குவதற்கான உரிமங்களை வழங்குவதற்கு எரிசக்தி தொடர்பான குழு மற்றும் பிற கொள்முதல் குழுக்கள் ஒப்புதல் வழங்கியுள்ளதாக அவர் கூறினார். (ம-7,9)

## பொருளாதார...

நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

காலிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாரிய மறுசீரமைப்புகளுக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது.

கடந்த ஓர் ஆண்டு காலமாக எதிர்கொண்ட பொருளாதார பாதிப்பில் இருந்து மீண்டுவிட்டோம். இனி பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்த அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும் என்றார். (ம-7,9)

## அரசின்...

இடம்பெறுவது மேலும் பிற்படுத்தப்படும் என்பது தெளிவாகின்றது என பஃவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ராஹேன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களை கண்காணிப்பதற்கு அரசாங்கம் குழுவொன்றை அமைப்பதற்கு எடுத்திருக்கும் தீர்மானம் தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மாகாண சபைகளை கண்காணிப்பதற்கும் உள்ளூராட்சி மன்றங்களை கண்காணிப்பதற்கும் குழுவொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் பிரேரித்திருப்பதாக தெரியவருகிறது.

எந்தவொரு தேர்தலையும் அண்மைக் காலத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் எந்த த்யாரும் இல்லை என்பதே இதன்மூலம் தெளிவாகின்றது. (ம-7,9)

## இந்து...

யளவில் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

இதனால் அலுவலகத்தின் ஜன்னல் கண்ணாடிகள் மற்றும் கதவுகள், பூச்சாடிகள் பலத்த சேதமடைந்துள்ளன.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்கள் விடுதிக்கு சம்பள அடிப்படையில் நியமிக்கப்பட்ட முகாமையாளரின் சேவையில் குறைபாடுகள் இருப்பதாகவும் எனவே அவரை அப்பதவியில் இருந்து நீக்குவதற்கு அனுமதி கேட்டும் யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றில் இந்து போட் நிர்வாகம் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

இவ்வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு வந்தபோது சம்பந்தப்பட்ட முகாமையாளரை ஆண்கள் விடுதியில் இருந்து வெளியேற்றுமாறு சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் மூலமாக சிறுவர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து நேற்று மாலை முகாமையாளர் அங்கிருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் மேற்படி இந்து போட் அலுவலகம் அடித்து உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது.

அலுவலகத்தைச் சேதப்படுத்தியவர்கள் ஆண்கள் விடுதியில் தங்கியுள்ள குறிப்பிட்ட சில மாணவர்கள் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை கோப்பாய் பொலிஸார், படையினர் மற்றும் அப்பகுதி மக்கள் இணைந்து அலுவலகத்தை தாக்கியவர்களை அங்கிருந்து வெளியேற்றினர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,9,33,104)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1527
ரிஷபம் 9 6 6 2 4 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1102
K 01 02 22 39

கொவிசெத
திகதி 2023.03.27
சீட்டிழுப்பு இலக்கம் 3314
V 17 18 63 77
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1420
Z 23 02 31 57 71

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.27
சீட்டிழுப்பு இலக்கம் 381
துலாம் 05 12 20 36 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/27
சீட்டிழுப்பு இலக்கம் 5072
C 7 5 1 1 8 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2047
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.03.27
தினம் திங்கட்கிழமை
Y 06 07 29 73
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,691,700/-
DLB

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.27
சீட்டிழுப்பு இல : 4208
ரூ. 4,402,980/-
42 67 71 75 T
DLB

ராசி
ரூ. 2,000,000/-
திகதி 2023-03-27
வெற்றி வாரம் 3759
வர்ணம் மஞ்சள்
17 23 32 54
3381
974
ரூ. 12,320,440/-
DLB

A 25 29 36 40 54
1223
பச்சை
2023.03.27
திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 316,910,844.20
DLB
011-2 333 546-47
Web: www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1908
சீட்டிழுப்பு திகதி 2023-03-27
03 39 50 69 Q
ரூ. 41,366,190.40
DLB
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1873
ரூ. 4,867,980/-
சீட்டிழுப்பு திகதி : 2023.03.27
32 51 68 71 P
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஜவுளிப் பண்டிகை

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலைசிறந்த ஆடைகள்

- பட்டுச்சாறிகள்
- கொட்டன் சாறிகள்
- சல்வார்கள்
- சல்வார் துணிகள்
- டொப், புரொக்
- சேட் மற்றும்
- சிறுவர் சிறுமியருக்கான ஆடைத்தெரிவுகள்

காலம்
17.03.2023 முதல்
சித்திரைப் புத்தாண்டு
14.04.2023 வரை

இடம்
வீரசிங்கம் மண்டபம்
யாழ்ப்பாணம்

*இது பிரமாண்டமான ஜவுளித்துறையின் சாம்ராஜ்யம்*

## இந்தியன் செலக்ஷன்

வாடிக்கையாளரின் நலன் கருதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.



(15058)



## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு முடி வெட்டுவதற்கு ஆண் வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (15065)

**076 768 5395**


# தவறி விழுந்த இருவர் பலி

கொட்டாஞ்சேனை - ஹெட்டியாவத்தை சுற்றுவட்டத்தில் உள்ள கழிவு நீர் வெளியேற்றும் குழியில் தவறி வீழ்ந்து இருவர் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

கழிவு நீர் வெளியேற்றும் குழியை சுத்திகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த கொழும்பு மாநகர சபையின் பணியாளர்கள் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.(ம-7,9)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14953)

**076 825 7716 (ஆகாஸ்)**



## வேலை வாய்ப்பு

கோண்டாவில் சந்தி பலாலி வீதியிலுள்ள விற்பனை நிலையமொன்றிற்கு பகுதி நேர பெண் விற்பனை உதவியாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு (15056)

**078 583 2356**



## வாடகைக்கு

வான்கள்/ கார்கள் வாடகைக்கு விடப்படும். (15067)

**077 489 1279**



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு

(C-6246)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)



(C-6246)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777



# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 22 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

## நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 132 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15063)

**077 814 7389**
**077 986 5457**



# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 87 பரப்புக்காணி விற்பனைக்கு (மேட்டு நிலம்) (நிலப்பரப்பு)




- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் (காபற்வீதி) இருந்து 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை (300,000) மூன்று இலட்சம் மற்றும் (200,000) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த காணி
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரம் சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 km தூரம்

(15042)

*பார்வையிடும் நேரம் :*
காலை 06 தொடக்கம்
மாலை 6 வரை

Owner & Director
T.KALAITHASAN (KARAN)

**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**

Office No :
**021 315 5900**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.